777

Registered No. M. 442.

सत्यमेवजयति

THE MESSENGER OF TRUTH

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 15 JUN 1915 MADRAS.

# சத்திய தூதன்.

JUNE, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**ஜர்மன் கொடுமை.** — தங்களிடத்திலிருக்கிற காயப்பட்ட இங்கிலீஷ் வீரர்களை ஜர்மன்கள் காப்பாற்றாமல் சுட்டுப்போடுகிறார்கள்.

**உடைந்த எலும்பைக் கூட்டல்.**—ஒரு க்ஷணப் பொழுதிலே, உடைந்த எலும்புத்துண்டுகளைக் கூடச்செய்யும் ஒருபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

**கப்பற்துண்டு.** — கடலிற்சுட்ட ஒரு குண்டு 10 மைல் தூரத்திற்போகிற ஒரு கப்பலை 10 எண்ணுகிறதற்குள்ளே பாய்ந்து சுட்டுவிடுகிறதாம். இதென்ன அதிசயமான விரைவு!

**ராஜபிறப்புற்சவம்.** — இம்மாதம் 3-ம் தேதி ராஜபிறப்பு நாளாக நியமிக்கப்பட்டாலும் யாதொரு கொண்டாட்டமும் நடவாதாம். ஆனால் வழக்கமாய்க் கொடுக்கிற பட்டங்கள்மாத்திரம் விளம்பரஞ் செய்யப்படும்.

**காந்தியவர்கள்.** — தென் ஆப்பிரிக்காவிலே வெகுகாலமாய் இந்தியர்களுக்காகப் பாடுபட்ட பாரிஸ்டர் காந்தியவர்கள் தம் மனைவியாளோடு இந்தியாவில் சுற்றிவந்து சென்னைக்கு விஜயஞ்செய்தார். ஜனங்களால் அனேகமாய்க் கொண்டாடப்பட்டார்.

**பிராஞ்சு ஆகாயக்கப்பல்.** — இந்தக் கப்பல்கள் யுத்தந்தொடங்கி இதுவரையும் பூமியை 40 தரம் சுற்றியதூரம் யாத்திரை செய்திருக்கின்றனவாம். ஆனாலுமென்ன? ஜர்மன் ராஜநகரியாகிய பர்லின்பேரில் ஒரு குண்டாயினும் போட்டது கிடையாது.

**ரஷியாவின் ஜனத்தொகை.** — இது ஜர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலியாகிய நான்கு ராஜ்யங்களின் ஜனத்தொகைக்கும் சரியானது. அதனால் ரஷியர் யாதொரு உதவியுமின்றி, தாமே ஜர்மனியை அழித்துவிடக் கூடுமாம். அப்படியானால், இவரும் சேர்ந்திருக்கிறார்களே! ஜர்மனிக்கு ஐயோ! அதன் நாசம் நிச்சயம்.

**கப்பல் யாத்திரை.**—வாரந்தோறும் ஜர்மன்கள் இரண்டொரு இங்கிலீஷ் கப்பல்களைச் சுட்டுக் கடலில் அமிழ்த்தினாலும், வாரந்தோறும் 1,600 கப்பல்கள் லண்டனுக்கும், லண்டனிலிருந்தும் சுகமாய்ப் போய்வருகின்றனவாம். ஜர்மன் சண்டைக்கப்பல்கள் சண்டைக்கஞ்சி, பிறர்த் துறைமுகங்களிலே ஒளித்துகொண்டிருக்கின்றனவாம்.

**உயர்ந்த வீடு.**—இந்நாட்டு ஊர்களில் குடிசைகள்தான் விசேஷம்; அங்கங்கே கொஞ்சம் கல்வீடுகள் உண்டு; மெத்தைகள் கிடையாது. நியுயார்க் என்கிற அமெரிக்கா பட்டணத்தில் ஒரு வீடு 756 அடி உயரமானது. இதைவிட உயரமான இல்லிடம் உலகத்திலில்லை. ஒரு அறைக்கு 10 அடி உயரம் வைத்தாலும் மொத்தம் 70 அடுக்கு மெத்தைகள் உண்டு. இந்நகரத்தாரின் தினசரி உணவுக்குமட்டும் $2\frac{1}{2}$ லட்சம் ரூ. செலவாகிறதாம்.

**லூசிட்டேனியா விபத்து.** — அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு பிரமாண்டமான அங்கிலேயக் கப்பல் ஒரு ஜர்மன் நீர் கீழ்க்கப்பலால் சுட்டுண்டு மூழ்கி நாசமாய்ப்போயிற்று. அதிலே கப்பற்காரர் அறுநூறு பேரும், பிரயாணிகள் 2,000 பேரும் இருந்தார்கள். பாலகர்மட்டும் 40 பேர். 700 பேர் தவிர மற்றவர்கள் எல்லாரும் மாண்டு மடிந்தார்கள். தப்பினவர்களிலும் அனேகம்பேர் பட்டகாயத்தினால் இறந்துபோகிறார்கள். சிலர் தப்பினது அற்புதம்போலிருக்கிறது. அங்கிலேயரும் அமெரிக்கரும் மிகுந்த கோபமூண்டு அவசியம் பழிவாங்கவேண்டுமென்று வைராக்கியம் சாதிக்கிறார்கள். ஆனால், இதுகாரணத்தால் அமெரிக்க அதிபதி யுத்தத்துக்குப் போகமாட்டாரென்பதுநிஜம். யுத்தத்துக்குப்போனாலோ, வீண் பொருள் நஷ்டமும் ஏராளமான உயிர் நஷ்டமும் நேரிடும். இதற்குச் சந்தேகமில்லை. அன்றியும் அமெரிக்காவிலே குடியிருக்கிற 10 லட்சம் ஜர்மன்கள் அந்த அரசுக்கு விரோதமா யெழும்பிக் கலகம் செய்வார்கள். அன்றி, அந்தக் கப்பல் புறப்படு முன்னமே ஜனங்கள் கப்பலுக்கு அவசியம் பேராபத்து நேரிடுமென்று எச்சரிக்கப்பட்டது. எச்சரித்தவர் ஜர்மன் (Ambassador) தானாபதியே. ஒரு அமெரிக்க குபேரன் செத்தாலென்ன, மரணமும் அதிவிநோதமான ஓர் பிரயத்தனந்தானே என்றாராம். அவரும் மாண்டார். ஜர்மன்களை அதிகமாய்க் குற்றப்படுத்தக் கூடாது. எதிரியின் கோட்டைகளைப்போல, அதன் கப்பலையும் கவிழ்த்தலும் அவர்களுக்குத் தர்மந்தான்.


**யுத்த விவரம்.** — சிலர் யுத்தம் அக்டோபர்மீ வரைக்கும் நடந்து, அப்பால் சமாதானம் ஏற்படுமென்று நினைக்கிறார்கள். இது ஏனென்றால், ஜர்மனியிலே சண்டைக்குத் தக்கவர்கள் 60 லட்சம்பேர்; இவர்களில் 30 லட்சம்பேர், மாண்டும், படுகாயப்பட்டும் கிடக்கிறார்கள். இனி இவர்கள் யுத்தத்துக்குப் போக முடியாது. மற்ற அரைவாசிப் பேரும், இதேவிதமாக அக்டோபர் மாதத்துக்குள் ஒழிந்துவிடுவார்கள். அப்பொழுது, இத்தாலியாவும் கூடச்சேர்ந்து ஐந்தாறுதேசத்துச் சேனைகள் ஜர்மன் தேசத்துக்குள்ளே மும்முரமாய்ப் பிரவேசித்து, நாலாதிசையிலிருந்தும் பர்லின் நகரம் நோக்கிச் செல்லும். அப்பொழுதுதான் ஜர்மனிக்குக் கண்திறந்து, புத்திதெளியும். சமாதானத்துக்கு வருவார்கள். சமாதானஞ் செய்தாலும், ஆறுமாதம்மட்டும் ராணுவங்கள் அந்நாட்டிலே தங்கியிருக்கும். இனி இப்படிப்பட்ட யுத்தம் உண்டாகாவண்ணம் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். ஜர்மனி யுத்தஞ்செய்கிறது இங்கிலாந்துமுதலிய ராஜ்யங்களோடு மாத்திரமல்ல, முழுமானிட ஜாதியாரோடும், தர்ம நீதியோடும், கடவுளோடும் என்பது சர்வ சம்மதமான அபிப்பிராயம்.

இதுநிற்க, சண்டை கொடிதாகவே நடக்கிறது. அனேக யுத்த ஜயங்கள் உண்டாயிருக்கிறது. கான்

### ஜூன்மூ பஞ்சாங்கம்—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ☉ பௌர்ணமி, 27உ ◑ அமாவாசை, 12உ | | | | | வைகாசி—ஆனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 6 | 13 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 32 | 7 | 14 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 1 | 8 | 15 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 2 | 9 | 16 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 5 | 12 | ... |

ஸ்தான்தினேபில் வெகு சீக்கிரத்தில் பிடிபடும் போலிருக்கிறது. துருக்கர் ஏராளமாய்த் தோற்றும் துரத்துண்டும் வருகிறார்கள். அவர்கள் இனி யூரோப்புக்கு வெளியே துரத்தப்படுவது வாஸ்தவம். அவர்களுக்கும் அதுதான் சுகமாயிருக்கும். இதுபரியந்தம் அவர்கள் ஆளுகையிலிருந்த பலெஸ்தீனா நாடு யூதருக்குத் திரும்பச் சேரும். இத்தாலியும் ஆஸ்திரியாவோடு போர்செய்யத் தொடங்கிவிட்டது. இங்கிலீஷ் அரசனும் மதுபானத்தைத் தமது அரண்மனை ஸ்தானத்திலிருந்து விலக்கிவிட்டார். இந்தியாவிலும அப்படி நடந்தால், பேரனுகூலமாயிருக்கும். கள்ளுக்கடை, சாராயக்கடையெல்லாம் அடைக்கப்பட்டால், நம் தேசத்துக்கு எவ்வளவு பாக்கியம் லபிக்கும். ஏழைகள் செழித்தோங்கிச் சிறப்படைவார்கள். செல்வம், சுகம் அதிகரிக்கும். அப்படியே இங்கிலீஷ் சாராயங்களுக்குப் பாரமான வரிபோட்டால், மெத்த ஐஸ்வரியவான்கள் தவிர, சாமானிய மனுஷர் இங்கிலீஷ் மதுபானஞ்செய்ய முடியாது.



பெய்ரூட்நகரமும் லீபனோன் மலையும்.

INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பன்னிரண்டாவது கதை.

### திருடனுக்காகப் பிணைப்பட்டவர் கதை.

ஒரு பட்டணத்தில் ஒரு மனிதன், அநேக தட்வைகளில் குற்றத்திலகப்பட்டு தண்டனைகளடைந்தான். ஒருதடவை அவன் மரணத்துக்கு ஏதுவான குற்றத்தைச் செய்துவிட்டான். உடனே நியாயாதிபதிகள் அவன் குற்றத்தை விசாரித்து அவனுக்குத் தாங்கமுடியாத தூக்குத்தண்டனை விதித்துவிட்டார்கள். உடனே காவற்காரர்கள் அவன் கையிலும் காலிலும் விலங்குமாட்டி, பட்டணத்துத் தெருவழியாக சிறைச்சாலைக்கு நடத்திப்போகிறார்கள். அந்தக் குற்றவாளியோ கண்ணீர் விட்டழுது ஓலமிட்டுக்கொண்டு போகிறான். எப்படியென்றால், என்னை 10 நாளைக்குள் தூக்குமரத்தில் தூக்கிவிடப்போகிறார்கள். நான்போய் என் பெண்ஜாதிப் பிள்ளைகளைப் பார்த்துவிட்டுத் தூக்குக்கு ஆஜராகிவிடுவேன். அதுமட்டும் யாராவது எனக்காகப் பிணைப்பட வேண்டுமென்று வழியில் போகிற ஜனங்களைப் பார்த்து கேட்டுக்கொண்டே போகிறான். அப்பொழுது ஜனங்கள் இந்தத் திருடனுக்காக யார் பிணைப்படுவார்கள். அவன் போய்த் திரும்பி வருகிறதுமுண்டோ! அந்த நாளைக்குள் வரவில்லையேயானால் நம்மைத் தூக்கிப்போடுவார்களே. ஏன்? அந்த ஜாமீன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அல்லதட்டி போகிறார்கள். குற்றவாளியோ திரும்பத்திரும்ப அலறிக்கொண்டு எனக்காக ஜாமீன் ஏற்றுக்கொள்வார் யாருமில்லையேயென்று அழுதுகொண்டு போகிறான்.

அப்பொழுது எதிரே வந்துகொண்டிருந்த ஒரு குரு அவன் அழுகிறதைப்பார்த்து மனதிரங்கி "அப்பா, அழாதே நீ போய் உன் விருப்பத்தின்படி உன் பெண்ஜாதிபிள்ளைகளுக்குச் சொல்லிவிட்டுவா அதுமட்டும் நான் உனக்காக ஜாமீன் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லி," அவன் கால் கைகளில் இருந்த விலங்கைக் கழற்றித் தன் கை கால்களில் போடும்படிச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார். காவற்காரர்கள் இந்தக் குருவை விலங்கிட்டு காவற்கிடங்கிற்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். அதை ஜனங்களோ பார்த்து, ஐயோ, அந்தக் குற்றவாளிக்காக நீர் ஏற்றுக்கொண்டீரே, அவன் இனி திரும்பி வருவதெப்படி என்று அந்தக் குருவுக்காக அங்கலாய்த்துக்கொண்டும் போகிறார்கள். குற்றவாளி 10-ம் நாள் 10 மணிக்குள் வரவில்லையானால் குருவைத் தூக்கிவிடுவார்கள். ஆனால் அந்தக் குருவுக்கு விசனமில்லாமல் சந்தோஷமாக காவற்கிடங்கிற் கைகாலில் விலங்கிடப்பட்டவராகவிருக்கிறார். குற்றவாளி போய் ஒன்பது நாளாகிவிட்டது; இன்னும் வரவில்லை. அவரைக்கண்ட ஜனங்களெல்லாரும் விசனப்படுகிறார்கள். இன்னும் ஒருநாள் பத்துமணி நேரம்தானே யிருக்கிறது. இன்னும் வரவில்லையே குற்றமில்லாத குருவைத் தூக்கிவிடுவார்களே யென்று அங்கலாய்க்கிறார்கள். பத்து நாளும் ஆகிவிட்டது; இன்னும் வரவில்லை. பத்து மணிநேரமாத்திரமிருக்கிறது, ஐந்துமணி ஆகிவிட்டது; இன்னும் வரவில்லை. குருவைத் தூக்குக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள். அவருக்குத் தேவையானவைகளெல்லாம் கொடுக்கப்படுகிறது. இன்னும் ஒருமணி நேரம்தானிருக்கிறது குற்றவாளி வரவில்லை.

G. D.

(இன்னும் வரும்.)

# A BIBLE ANECDOTE.

## சத்தியவேத புஸ்தகத்தைக் குறித்த சன்மார்க்க அதிசய சரிதை.

லண்டன் பட்டணத்தில் கொஞ்சக்காலத்துக்கு முந்தி தனவந்தனான ஒரு பிரபு இருந்தார். அவர் தாம் பிறந்த தினத்தன்று தம் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் எல்லாரையும் கூப்பிட்டு வெகுமதி கொடுப்பது வழக்கம். ஒருதடவை மேற்படி தினத்தில் வீட்டிலுள்ள வேலைக்காரர்களெல்லாரையும் அழைத்தார். வந்த உடன் I–வது. வீடு சுத்தம் பண்ணுகிறவனைக் கூப்பிட்டு உனக்கு இந்த வேதபுஸ்தகம் வேண்டுமோ அல்லது ரூ. 50 வேண்டுமோ என்று கேட்டார். அதற்கவன் எனக்குப் படிக்கத் தெரியாததினால் பணத்தைக் கொடுத்தால் அதிக நன்மையைப் பெற்றுக்கொள்வேன் என்றனன். உடனே பிரபு ரூ. 50 கொடுத்தனர். II–வது. தோட்டக்காரனைக் கூப்பிட்டு உனக்கு இந்த வேத புஸ்தகம் வேண்டுமோ அல்லது ரூ. 50 வேண்டுமோ என்று கேட்க, அப்போது அவன் என் மனைவி வியாதியாயிருக்கிறாள் தற்சமையம் பணம்தான் வேண்டுமென்றான். உடனே ரூ. 50 கொடுத்தார். III–வது. சமையல்காரி மேரியம்மாளைக் கூப்பிட்டு உனக்கு வாசிக்கத் தெரியுமே, இந்த வேதபுஸ்தகம் வேண்டுமோ அல்லது ரூ. 50 வேண்டுமோ என்று கேட்க, அவள் எனக்குப் படிக்கத் தெரியும். ஆனால் படிக்கச் சமயம் கிடையாது. ஆகையால் பணம் கொடுத்தால் நேர்த்தியான உடுப்புகள் வாங்கிக் கொள்ளுவேன் என்க, அவள் விருப்பத்தின்படி ரூ. 50 பிரபு கொடுத்தனர். IV–வது. உள்வீட்டு வேலைக்காரி சௌந்தரம்மாளைச் கூப்பிட்டு உனக்கு இந்த வேதபுஸ்தகம் வேண்டுமோ அல்லது ரூ. 50 வேண்டுமோ என்று கேட்க, அதற்கவள் எனக்கு ஒரு வேதபுஸ்தகமுண்டு. அதைப் படித்தால் போதாதா என்க, அவள் மனதின்படி ரூ. 50 கொடுத்தனர். V–வது. தன் வீட்டில் தபால் கொண்டுபோகும் ஜார்ஜ் என்ற ஒரு பையன் இருந்தான். பிரபு அவனைக் கூப்பிட்டு உனக்கு உடுப்புகளெல்லாம் அழுக்காயும் கேவலமாயுமிருக்கிறதே. இந்த ரூ. 50 தருகிறேன், அழகான உடுப்புகள் வாங்கிக்கொள்ளுகிறாயா, அல்லது இந்த வேதபுஸ்தகத்தை வாங்கிக்கொள்ளுகிறாயா என்க, அதற்கவன் கனம்பொருந்திய பிரபுவே தங்கள் சொல்லுக்கு வந்தனம். ஆனால் என் பிரியமுள்ள தாயார் அனேக தடவைகளில் வேத புஸ்தகமானது தாவீது அரசன் பாடிய சங்கீதம். 119–72 வசனத்தில் சொல்லியபடி அனேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் விசேஷமென்று சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் அந்த வேத புஸ்தகத்தைத் தாருங்களென்று கேட்டான். பிரபு முகமலர்ச்சியுடன், சிறுவனே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. நீ ஞானத்தோடு தெரிந்துகொண்ட புஸ்தகமானது உனக்கு ஐசுவரியத்தையும் கனத்தையும் தீர்க்காயுளையும் கொடுப்பதாகவென்று சொல்லி வேதபுஸ்தகத்தைக் கொடுத்தனர். அதைச் சிறுவன் ஆவலுடன் வாங்கித் திறந்தான். திறக்கவே ஒரு பவுண் அதினுள்ளிருந்து கீழே விழுந்தது. அதை எடுத்துக்கொண்டு வேதபுஸ்தகத்தை ஏடு ஏடாய் அல்லது தாள்தாளாய்த் திருப்பினபோது இரண்டு காகிதத்துக்கு மத்தியில் வரிசையாய் பேங்கு நோட்டுகள் வைத்திருப்பதைக் கண்டு அகமகிழ்ச்சிகொண்டு பிரபுவினிடம் கொண்டுபோய்க் காட்ட உன் பெற்றோர்கள் சொன்னதுபோல வேதபுஸ்தகம் விலை மதிக்கப்படாததாயிருக்குமென்று சொன்னார்களே அதுபோல இருக்கிறது. அதையும் நீதான் எடுத்துக் கொள். அது உனக்குரியதுதான் என்க, சுற்றிலும் நின்ற வேலைக்காரர்கள் பார்த்துப் பொறாமை கொண்டு துக்கத்துடன் நமக்குப் பிரபு முதலாவது கொடுக்கவேண்டாமென்று சொல்லி நம்மவாயில் நாமே மண்ணைவாரிப் போட்டுக்கொண்டோமென்று அங்கலாய்த்தார்கள். மனமிருந்தபடி குரு இருந்து இரட்சிப்பார். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்.

V. GURUBATHAM,
*Catechist*,
MADUPUTTY.


அனேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். *சங்.* 119. 72.

வேத புஸ்தகமே வேத புஸ்தகமே விலைபெற்ற செல்வமே, விலை மதிக்கப்படாத உயர்வுடைய வேதமே என் மனமகிழ்ச்சி. *சங்.* 119. 79.

ஞானமே நல்லது; இதற்கு நிகரொன்றுமில்லை. *நீதி.* 8. 10, 11. 3. 14, 15. *யோபு.* 28. 12–19. *நீதி.* 16. 16.

# MELLIN'S FOOD

ORA ET LABORA
TRADE MARK.



## மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.







மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.